*International Multidisciplinary Innovative Research Journal*
*An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume - III (1)**
**November 2018**

# இலக்கியத்தில் கலைகள் - ஓர் ஆய்வு

**நித்யா.பா**
உதவிப் பேராசிரியை, தமிழ்த் துறை
வே.வ. வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி
விருதுநகர்
தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைய தமிழரின் பண்பாடு மிகவும் பழமையானது என்பதை பகர்வதே சங்ககாலக் கலைகளாகும். இயற்கையிலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கிய பண்டையத் தமிழகம் கலையிலும் சிறந்து விளங்கியது. கலைகள் சமுதாயத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகும். பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாட்டை அறிவதற்கு அவர்கள் விட்டுச் சென்ற கலைச் செல்வங்களே மிகவும் உதவுகின்றன. சங்ககாலக் கலைஞன் இயற்கையின் கட்டமைப்பைக் கொண்டு ஓவியத்தையும் பல்வேறு விதமான ஓசையைக் கேட்டு இசையையும் உருவாக்கினான். இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான கலைப்பொருட்கள் கால வெள்ளத்தால் அழிந்து விட்டன. ஆயினும் இலக்கியங்களில் அவை இன்றும் வாழ்கின்றன. இக்கலைகள் சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ள தன்மையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கட்டடக்கலை

பண்டைய காலத்தில் எளிய மக்கள் வாழுகின்ற குடிசை வீடுகளை குரம்பை என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். இக்காலத்தில் "இல்" என்ற சொல் மக்கள் வாழ்கின்ற இல்லத்தைக் குறிக்கின்ற சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. இலை, புல், கழி, திணை கொண்டு சங்ககால மக்கள் குடிசை வீடுகள் கட்டினர் என்பதை,

> "இருவி வேய்ந்த குருகால் குரம்பை
> அகலுள் ஆங்கண் கழியிடைந்து இயற்றிய
> புல்வேய் குரம்பை"[1]

என இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

சங்க காலத்தில் கட்டடங்கள் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். மேலும் கோயில்கள் மரவிட்டங்களால் தாங்கப்பெற்றவை. உயர்ந்த செங்கல் சுவர்கள் கொண்டவை என்பதை,

"இட்டிசை நெடுஞ்சுவர் மரஞ்சோர் மாடம்"[2]

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

சங்ககால மக்களால் கட்டடக்கலை வளர்ச்சியடைந்துள்ளது. கதவுகள், சன்னல்கள், மேற்கூரைகள், அமைத்து வீடுகள் கட்டிச் சங்ககால மக்கள் வாழ்ந்தனர் என்பதை,

"மணம் புணர்ந்து ஓங்கிய அணங்குடை நல் இல்" [3]
"திண்சுவர் நல்இல் கதவம் கரைய"[4]

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

பண்டையத் தமிழர்கள் கட்டக்கலையை அறிந்து மரக்கொம்புகளைக் கொண்டு கால்களை நட்டுக் குடிசைகளை அமைத்து வாழ்ந்ததும், கதவுகள் சன்னல்கள் அறைகள் அமைத்துக் கொண்டு வாழ்ந்ததும் புலனாகிறது.

சங்கத் தமிழர் தாங்கள் வாழும் இடங்களுக்கு உரிய வீட்டினை அமைக்கும் பொழுது வீட்டிற்குள் பல அறைகளை அமைத்து கட்டியிருக்கிறார்கள் என்பதை,

"குறுந்தொடை நெடும் படிக்கால்
கொடுந் திண்ணை பல் தகைப்பின்
புடை வாயில் போகு இடைசுழி
முழை தோயும் உயர் மாடத்து"[5]

என இப்பாடல் அடிகள் தெளிவாக்குகின்றன. பண்டையத் தமிழர்கள் உயர்ந்த மாடம் அமைக்கும் பொழுது சிறிய ஏணிகளை அமைத்தும் படிகளுக்கு பக்கத்தில் திண்ணைகள் அமைத்தும் பல சிறு அறைகளை அமைத்தும் சிறு வாயில்கள் பெரிய வாயில்கள், இடைச்சுழி அமைத்தும் கட்டடக்கலையை வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை அறியலாம்.

**சிற்பக்கலை**

மனிதன் விலங்கு, பறவை, மரம், செடி, கொடி முதலிய இயற்கை உருவங்களையும் கடவுள், அரக்கன் முதலிய கற்பனை உருவங்களையும் அழகுபட அமைப்பதே சிற்பக்கலையாகும். சங்க காலத்தில் மண், மரம் ,கல் ஆகியவற்றில் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. அக்காலத்தில் இறந்த வீரர்களுக்கு கற்களால் சிலை அமைக்கும் வழக்கம் இருந்துள்ளது. சிற்பம் அமைப்பதற்கு உரிய பொருட்கள் குறித்து மணிமேகலை குறிப்பிடுகையில்,

"வழுவறு மரனும் மண்ணும் கல்லும்
எழுதிய பாவையும்...."[6]

என்று எடுத்துரைக்கின்றது.

நடுகல் சிற்பம் அமைக்கும் முறையின் படி கோப்பெருஞ்சோழன் நடுக்கல்லாயினான் என்னும் செய்தியை,

"நிலைபெறு நடுக லாகியக் கண்ணும்
இடங் கொடுத் தளிப்ப மன்ற"[7]

என்பதன் மூலம் அறியமுடிகிறது.

**ஓவியக்கலை**

தமிழுக்குப் பெருமையூட்டும் பழமை மிக்க கலைகளுள் ஒன்று ஓவியக்கலை. சங்க காலத்தில் ஓவியக்கலை வளர்ச்சியடைந்த நிலையை சங்ககால நூல்கள் உணர்த்துகின்றன. சங்க காலத்தில் ஓவியக்கலைஞர் "கண்ணுள் வினைஞர்" என்று அழைக்கப்படுவார். கோயில்கள் மற்றும் மாளிகையின் சுவர்களில் ஓவியம் வரையப்பட்டுள்ளன. சங்ககாலத்தில் சுவரோவியங்கள் வரையப்பட்டிருந்தன என்பதை

"புனை சுவர்ப் பாவையன்ன பழநீர்காட்சி"[8] இப்பாடலின் வழி அறிய முடிகின்றது. மாளிகையில் வரையப்பட்டிருந்த ஆண் புலியைக் கண்ட பெண்புலி ஆண் யானையைப் பாய்ந்து அடித்தது என்பதை,

"எழில் மாடத்துக்
கைபுனைக் கிளர் வேங்கைக் காணிய வெருவுற்று
மைபுரை மடப்பிடி"[9]

இப்பாடலின் மூலம் தமிழர்கள் பெற்றிருந்த திறமையை அறியலாம்.

சங்க இலக்கியத்தில் ஓவியம் பற்றிய குறிப்புகள் அகப்பாடல்களிலும் புறப்பாடல்களிலும் காணலாம். தலைவன் தான் விரும்பிய பெண்ணின் உருவத்தை ஓவியமாக வரைந்து மடலேறிய செய்தியை அறியலாம். சங்க இலக்கியம் செந்நிறம் பூசப்பட்ட சுவர்களில் சித்திரம் தீட்டியிருந்ததை எடுத்துரைக்கின்றது. மதுரையில் கடைத்தெரு முழுவதும் ஓர் ஓவியம் காட்சியாகத் தோற்றமளிப்பதை,

"ஓவு கண்டன்ன இருபெரு நியமம்"[10]

என்பதிலிருந்து அறியலாம்.

கோயில்களில் வெண்மையான சுவர்களில் ஓவியம் வரையப்பட்டிருந்ததை,

“வினை ஓவத்து வெண்கோயில்” [11]

என்பதன் மூலம் உணரலாம். இவை மட்டுமில்லாமல் கோயில்களில் ராசி நட்சத்திரங்களின் ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பதை நெடுநல்வாடை மூலம் அறியலாம்.

**இசைக்கலை**

“இசைக்கு மயங்கா உயிர்கள் இல்லை” என்பதற்கிணங்க மக்கள் இசையோடு இரண்டறக் கலந்துள்ளனர். சங்ககால மக்கள் யாழ், குழல், முழவு, தண்ணுமை, முரசு, பறை போன்ற இசைக் கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

“கொடுங்கோற் கோவலர் குழலோ போன்றி”[12]
“மடிவாய்த் தண்ணுமை நடுவன் ஆர்ப்ப”[13]
“குணில் பாய் முரசின் இரங்கும் அருவி”[14]
என்ற பாடல் அடிகளால் அறியலாம்.

அக இலக்கணத்தில் கருப்பொருள்களில் ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் உரிய பறையும் ,யாழும் ,பண்ணும் வரையறை செய்யப்பட்டிருந்தன. இசைக்கருவிகளை அடிப்படையாகக் கொண்டு சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என நூல்களுக்கு பெயரிடப்பட்டிருந்தன. பெண்கள் வேலை செய்யும் போதும் அருவியில் நீராடும் பொழுதும் பாடல்கள் பாடி மகிழ்ந்தனர். என்பதை

“பாய் சுனைகுடைவுழி
நளிபடு சிலம்பில் பாயம்பாடி” [15]
என்ற பாடலடியின் மூலம் அறியலாம்.

ஓய்வு நேரத்தை சங்ககால மக்கள் இசையைக் கேட்பதற்கும், நாடகம் பாாப்பதற்கும் செலவிட்டனர் என்பதை,

“பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்”[16]

என்பதன் மூலம் அறியலாம்.

மதுரையில் விடியற்காலையில் யாழ் இசைப்பவர்கள் நரம்பை இனிதாக வருடி மருதப் பண்ணைப் பாடுவார்கள் என மதுரைக்காஞ்சி குறிப்பிடுவதை,

“சீர் இனிது கொண்டு நரம்பு இனிது இயக்கி
யாழோர் மருதம் பண்ண”[17]
என்பதன் மூலம் அறியலாம்.

**நாடகக்கலை**

சங்ககால மக்கள் நாடகக்கலையை பாடலோடும், ஆடலோடும் கண்டு ரசித்துள்ளனர். கூத்தர், பாணர், பொருநர், விறலியர் போன்றவர்கள் மக்களை மகிழ்விக்கும் ஆடல் பாடல்கலைகளில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். சங்ககாலத்தில் பல்வேறு வகையான கூத்துக்களை நிகழ்த்தியுள்ளனர். அதில் ஆடுவதைப் பற்றி கலித்தொகையும், குறுந்தொகையும் குறிப்பிடுகின்றன.

"மகளிர் தழீஇய துணங்கை யானும்" [18]

"நிறைதொடி நல்லவர் துணங்கையுள் தலைக்கொள்ள" [19]

என்பதன் மூலம் அறியலாம்.

இறை வழிபாட்டில் முருகக் கடவுளை வணங்கும் போது ஆடும் கூத்து குன்றக் குரவை எனவும் திருமாலை வணங்கும் போது ஆடும் கூத்து ஆய்ச்சியர் குரவை எனவும் வழங்கப்பட்டன.

"………….செவ்வேள்

வேறி ஆடு மகளிர்"[20]

என்பதன் மூலம் மக்கள் இன்பத்திற்கும், இறைவழிபாட்டிற்கும் நாடகத்தை பயன்படுத்தினர் என்பதை அறியலாம்.

**தொகுப்புரை**

கலைகள் பழந்தமிழரின் வாழ்வியலைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது. மக்களின் பண்புகளையும், உணர்ச்சிகளையும், கற்பனைகளையும் வளர்த்துக் கொண்டு மிளிர்வதே கலையின் பண்பாகும். பண்டைத் தமிழரின் வாழ்வில் கட்டடக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை போன்றவை சிறந்த முறையில் பின்பற்றப்பட்டுள்ளன. இத்தகைய கலையானது அன்று முதல் இன்று வரை வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை இவ் ஆய்வுக் கட்டுரை மூலம் அறியலாம்.

**அடிக்குறிப்புகள்**:

1. குறிஞ்சிப்பாட்டு – பா.வரி. 153
2. மலைபடுகடாம் --பா.வரி. 38-39
3. அகநானூறு –பா.எண்.167
4. மதுரைக்காஞ்சி –பா.வரி.578
5. மேலது.பா.வரி. 358
6. பட்டினப்பாலை –பா.வரி.142-145

7. மணிமேகலை –21 –வது காதை
8. புறநானூறு –பா.எண். 223
9. நற்றிணை –பா.எண்.252
10. பரிபாடல் --பா.எண்.10
11. மதுரைக்காஞ்சி—பா.வரி.365
12. பட்டினப்பாலை –பா.வரி.49
13. நற்றிணை –பா.எண்.69
14. மேலது. –பா.எண்.130
15. புறநானூறு –பா.எண.143
16. குறிஞ்சிப்பாட்டு – பா.வரி.57
17. பட்டினப்பாலை –பா.வரி.114
18. மதுரைக்காஞ்சி—பா.வரி.667-668
19. குறுந்தொகை –பா.எண். 31
20. கலித்தொகை –பா.எண்.73
21. பட்டினப்பாலை –பா.வரி.15